# 7 தேர்ச்சி: ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்

## 1.7. நம்மை இயக்கும் ஆற்றலின் ஆவியானவர்

**பின்வரும் பாடலைப் பாடவும்.**

**எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே**



எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே
இந் நாளில் உம் சித்தம்போல் நடத்திச் செல்லுமைய்யா //

ஆவியானவரே ஆவியானவரே பரிசுத்த ஆவியானவரே //

எங்கு செல்ல வேண்டும் என்ன சொல்ல வேண்டும்
வழிநடத்தும் ஆவியானவரே
உம் விருப்பமில்லாத இடங்களுக்குச் செல்லாமல்
தடுத்து நிறுத்தும் ஆவியானவரே //

**துணையாளர் உண்மையின் ஆவியானவர்.**

கிறிஸ்து தமது துணையாளரை அல்லது உண்மையின் ஆவியானவரை எமக்கு அனுப்புவதாக வாக்குப்பண்ணினார். இது நிபந்தனையுள்ள வாக்குறுதி.

**நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப் பிடிப்பீர்கள். உங்களோடு என்றென்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார்; உங்களுக்குள்ளும் இருக்கிறார்.**

**(யோவா. 14:15–17)**

கிறிஸ்து அனுப்பும் தூய ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அவை,

1. கிறிஸ்துவை அன்பு செய்ய வேண்டும்.
2. இறை கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நாம் இந்நிபந்தனைகளை நிறைவேற்றும்பொழுது எமக்காக செபிக்கவும் எம்முடன் எப்பொழுதும் குடிகொள்ளவும் துணையாளரான தூய ஆவியானவரை எம்மத்தியில் அனுப்புவதாக வாக்குப்பண்ணினார். மேலும், துணையாளர் உண்மையின் ஆவியானவர் எனவும், எம்மத்தியில் குடிகொள்கிறார் எனவும் வெளிப்படுத்தினார்.

நாம் திருமுழுக்கு வழியாகப் பெற்றுக்கொண்ட புது வாழ்வையும் தூய ஆவியின் ஒளியையும் பற்றியே இயேசு இவ்வாறு வெளிப்படுத்தினார். எம்மில் அவருக்குள்ள அன்பினால் தான் அவர் இவற்றை எமக்கு வழங்கினார். அன்பின் சிறப்பை வெளிப்படுத்துவதற்காகவே தூய ஆவியைப் பெறுவதற்கு நாம் கிறிஸ்துவை அன்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை அவர் முன்வைத்தார். அன்புதான் உலகில் செயற்படும் மாபெரும் சக்தி. இது வார்த்தைகளைக் கடந்தது. இதை நாம் செயற்படுத்த வேண்டும்.

கிறிஸ்துவின் ஒவ்வொரு செயலும் சொல்லும் அன்பால் நிறைந்துள்ளன என்பதை நற்செய்திகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பார்வையற்றோர், காதுகேளாதவர், தொழுநோயாளர் மட்டில் தாம் கொண்டிருந்த அன்பினால் தான் அவர்களைக் குணமாக்கினார் என நற்செய்திகள் வழியாக அறிகிறோம்.

திருமுழுக்கு வழியாக செயற்படும் தூய ஆவி அன்பின் வல்லமை உள்ளவர். இத் தூய ஆவிக்குரிய அன்பின் வல்லமையை திருமுழுக்கு வழியாக நாமும் பெற்றுள்ளோம். திருமுழுக்கு வழியாக தூய ஆவியை நாம் சந்திக்கிறோம். எனவே, நம்மில் ஏதாவதொரு மாற்றம் ஏற்பட வேண்டும்.

**சிந்திக்கவும்:**

1. நீர் பெற்றுக்கொண்ட திருமுழுக்கு வழியாக உம்மில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி சிந்திக்கவும்.
2. நன்மை செய்ய நாட்டமிருந்தால், சரியானவற்றைச் செய்ய நாட்டமிருந்தால் உம்மில் இம்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
3. எனவே, நீர் மகிழ்வோடு நல்லதையே செய்யும்.

## ✪ வாக்குறுதி நிறைவேறுதல்

**இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள் என்றார்.**

**(லூக். 24:49)**

தூய ஆவியை அனுப்புவதாக கிறிஸ்து வெளிப்படுத்தினார். இவ்வாக்குறுதி நிறைவேறும்வரை, கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்ததன் பின் திருத்தூதர்கள் ஒலிவ மலையிலிருந்து இறங்கி எருசலேம் நகருக்குச் சென்றனர். தாம் தங்கியிருந்த மேல் மாடியில் கூடி தூய ஆவி வரும்வரை இடைவிடாமல் செபித்து ஆயத்தம் செய்தார்கள்.

திருத்தூதர்களுக்கு கூறியதுபோல கிறிஸ்து உமக்கும் அழைப்பு விடுக்கின்றார். திருமுழுக்கில் நீர் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ வாழ்வின் அழைப்புக்கு ஏற்ப வாழ்ந்து தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தம் செய்வதே அச்சவாலாகும்.

திருமுழுக்கு வழியாக திருச்சபையின் உறுப்பினராகிய நீர் நற்கருணை பெற்று கிறிஸ்துவைப்போல் வாழும் வரத்தைப் பெற்றுள்ளீர். இதற்குப் பின் தூய ஆவியை நீர் பெறுவதற்காக ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் மரணத்தின் பின்னர் சிதறி ஓடிய சீடர்கள் அவரது வாக்குறுதியை நினைவில் கொண்டு மீண்டும் எருசலேமுக்குச் சென்றார்கள். மேல் மாடியில் ஒன்றாகக் கூடி இயேசுவின் தாய் மரியாவுடன் இணைந்து செபத்தில் ஈடுபட்டார்கள். இறை அன்னையின் அறிவுரைகளாலும் ஊக்கத்தாலும் அவர்கள் தூய ஆவியின் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.



**திடீரென்று கொடுங் காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது வானத்தின் கீழுள்ள அனைத்து நாடுகளிலுமிருந்தும் வந்திருந்த இறைப்பற்றுள்ள யூத மக்கள் எருசலேமில் தங்கியிருந்தனர். அந்த ஒலியைக் கேட்டுக் கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக் கேட்டுக் குழப்பமடைந்தனர். எல்லோரும் மலைத்துப்போய், "இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய்மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?" என வியந்தனர்.**

**(தி.ப. 2:2–8)**

திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சலோடு தூய ஆவியின் வருகை நிகழ்ந்தது. மேல் மாடியில் ஒன்றாகக் கூடியிருந்தவர்கள் அச்சத்தினால் நிறைந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும், திடுக்கிடும் வகையில் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். பெண்கள், இயேசுவின் தாய் மரியா, திருத்தூதர்கள் உட்பட ஏறக்குறைய 120பேர் அங்கே இருந்தார்கள்.

அன்று 120 பேர் குழுவாக ஒன்றாகக் கூடியிருந்தார்கள். உண்மையாகவே இது கடுகுமணி போன்றதாகும் (மாற். 4:30-32). இன்று திருச்சபை வளர்ந்து வெவ்வேறு நாட்டினரையும் இனத்தவரையும் உறுப்பினராகக் கொண்டுள்ளது. சிங்கள, தமிழ் கிறிஸ்தவர்களாகிய நாமும் திருச்சபையில் உறுப்பினராகத் திகழ்வது எவ்வளவோ பாக்கியமான ஒன்றாகும். இதற்காக நாம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும்.

கல்வி அறிவற்றவர்களாக இருந்த திருத்தூதர்கள் தூய ஆவியால் நிரம்பியவர்களாக ஞானத்தோடு பேசத் தொடங்கினர். உலகெங்கும் நற்செய்தியைப் போதிப்பதற்குத் தேவையான பேசும் ஆற்றலையும் மொழித்திறனையும் பெற்றார்கள். இவ்வாறு, பெந்தக்கோஸ்து தினத்திலே தான் திருச்சபையின் பிறப்பு நிகழ்ந்தது.

**கலா. 4:6 இல் படிக்கிறோம்**

நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார்; அந்த ஆவி "அப்பா, தந்தையே" எனக் கூப்பிடுகிறது.

எனவே, இறைவனை தந்தை என அழைக்கும் உரிமையை நாம் பெறுகிறோம்.

**லூக். 11:10-13 இல் படிக்கிறோம்**

ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும். பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!

தூய ஆவி உம்மீது வரவேண்டுமென செபிக்கவும். முழுமையான முதிர்ச்சியுள்ளவராக வளரத் தேவையான தூய ஆவியின் அருட்பொழிவுக்காக ஆயத்தம் செய்ய வேண்டும். இச்செயற்பாட்டை உம்மில் அனுபவித்து அர்ப்பணிப்புடன் வாழ வேண்டும்.

நீரும் ஒளியின் பிள்ளையாக வாழ தூய ஆவியின் கனிகளைப் பெறவேண்டும்.

நாம் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு வாழ்ந்தால், தூய ஆவியின் வழிநடத்தலைப் பெறுவோம்.

**பின்வருவன பற்றி சிந்திக்கவும். பதில் எழுதவும்.**

1. நீர் எப்போது தூய ஆவியின் ஆலயமானீர்?
2. தூய ஆவி எப்போது, எங்கே திருத்தூதர்கள் மேல் இறங்கினார்?
3. தூய ஆவியை பெற்றுக்கெள்ள நிபந்தனைகள் எவை?
4. தூய ஆவியின் வழிநடத்தலால் நீர் செயற்பட்ட இரு சந்தர்ப்பங்களைக் காட்டுக.
5. தூய ஆவி இறங்கியபோது நிகழ்ந்த அடையாளங்களைப் பெயரிடுக.
6. தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட முதல் குழுவில் எத்தனை பேர் இருந்தார்கள்?
7. கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட்ட இரு சந்தர்ப்பங்களைக் குறிக்கவும்.
8. திருமுழுக்கு பெற்றதால் உமது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடவும்.

**உமது வாழ்க்கைக்கு...**

தூய ஆவியே
எம்மோடு தங்கும்.